DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

…………

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 126 of 2017 PW :6

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. A. முரளி

Father's Name : திரு. ஆறுமுகம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 55

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.07.2026

**தேதி. 17.07.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 126/2017 அ.த.சா.6 திரு.A. முரளி த/பெ. திரு. ஆறுமுகம் வயது 55 அவர்களை சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது D3 கனகம்மசத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்து தற்போது அயற்பணியாக திருத்தணி மலைப்பகுதி தனிப்பிரில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தை கடந்த 10.07.2017 அன்று காலை 10.00 மணியளவில் பொம்மராஜுபேட்டை கிராமத்தில் புகார்தாரரின் வீட்டருகே வைத்து கையொப்பம் போட்டேன். என்னுடன் ராமமூர்த்தி என்ற தலைமை காவலரும் பணியில் இருந்தார். அவரும் என்னுடன் கையொப்பம் செய்தார். உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார். பின்னர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இதுகுறித்து உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மகசரில் கையொப்பம் செய்ய எனது உயர் அதிகாரியை கேட்டு தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிப்பதற்கு தனிப்பட்ட சாட்சியாக வந்தேனா அல்லது போலீஸ் சாட்சியாக வந்தேனா என்றால் போலிஸ் சாட்சியாக வந்தேன். மாதிரி வரைபடம் தயார் செய்த இடத்தை எனது உயர் அதிகாரி கூறியதின் பேரில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில்

எனது உயர் அதிகாரி வரைந்ததில் நான் கையொப்பம் செய்தேன். மாதிரி வரைபடம் தயார் செய்தபோது பொதுமக்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடம் தயார் செய்த நேரம் காலை 10.00 மணி ஆகும். நான் உயர்அதிகாரி கேட்டுக்கொண்டதின் பேரில் மாதிரி வரைபடத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும் வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒப்பம் – K. வெங்டேசன், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்
பள்ளிப்பட்டு(FAC)